# ஊடக அறிக்கை

ஸ்ரீ லங்கா மஹ பெங்குவ
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA



தொடர்பூட்டல் திணைக்களம், இல.30, சனாதிபதி மாவத்தை, கொழும்பு 01, இலங்கை
+94 11 2477424 / +94 11 2477423 +94 11 2346257
communications@cbsl.lk / dcommunications@cbsl.lk www.cbsl.gov.lk


| வெளியிடுபவர் | புள்ளிவிபரத் திணைக்களம் |
|---|---|
| திகதி | 2021.09.15 |

## இலங்கை கொள்வனவு முகாமையாளர் சுட்டெண் (கொ.மு.சு) – 2021 ஓகத்து

**தயாரிப்பு மற்றும் பணிகள் நடவடிக்கைகள் இரண்டிற்குமான கொள்வனவு முகாமையாளர் சுட்டெண்கள் 2021 ஓகத்தில் சுருக்கமடைந்தன**

**தயாரிப்பு கொ.மு.சு சுட்டெண் பெறுமதி 45.1**

2021 யூலையுடன் ஒப்பிடுகையில் 12.7 சுட்டெண் புள்ளிகள் கொண்ட வீழ்ச்சி

**2021 ஓகத்தில் கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்று மீளெழுச்சி பெற்றமை நாட்டின் தயாரிப்பு நடவடிக்கைகளை மெதுவடையச் செய்துள்ளது.** அதற்கமைய, தயாரிப்பு கொள்வனவு முகாமையாளர் சுட்டெண்ணானது முன்னைய மாதத்திலிருந்து 12.7 சுட்டெண் புள்ளிகளைக் கொண்ட வீழ்ச்சியுடன் 2021 ஓகத்தில் 45.1 சுட்டெண் பெறுமதியொன்றினை பதிவுசெய்து இது, புதிய கட்டளைகள், உற்பத்தி, தொழில்நிலை மற்றும் கொள்வனவுகளின் இருப்பு துணைச் சுட்டெண்களில் காணப்பட்ட வீழ்ச்சியின் மூலம் பிரதானமாகத் தூண்டப்பட்டிருந்தது.

புதிய கட்டளைகளில் மற்றும் உற்பத்தியில் விசேடமாக உணவு மற்றும் குடிபானங்கள், தளபாடம் மற்றும் புடவைகள் மற்றும் அணியும் ஆடைகள் தயாரித்தலில் ஏற்பட்ட வீழ்ச்சி, தயாரிப்பு கொள்வனவு முகாமையாளர் சுட்டெண்ணின் ஒட்டுமொத்த குறைவிற்கு முக்கியமாகப் பங்களித்துள்ளது. உலகளாவிய நோய்த்தொற்றினைக் கட்டுப்படுத்தும் வழிமுறையொன்றாக விதிக்கப்பட்ட முடக்கம் காரணமாக தமது உள்நாட்டு கட்டளைகளும், விநியோக மார்க்கங்களும் பாதிக்கப்பட்டிருந்தன என இத்துறைகளைச் சேர்ந்த பல பதிலிறுப்பாளர்கள் சுட்டிக்காட்டினர். மேலும், ஊழியர்கள் மத்தியில் கொவிட்-19 வைரஸ் பரவல் காரணமாக தொழிற்சாலை தொழிற்பாடுகள் இடையூறுக்குள்ளாகின என அவர்களில் பலர் குறிப்பிட்டிருந்தனர். தொழில்நிலை துணைச் சுட்டெண்ணும் இவ் அபிவிருத்திகளுக்கிசைவாக வீழ்ச்சியடைந்தது.



மூலம்: இலங்கை மத்திய வங்கி

| மாறி | யூலை | ஓகத் | +/- | சுருக்கம் |
|---|---|---|---|---|
| **கொ.மு.சு** | **57.8** | **45.1** | - | **அதிகரிப்பிலிருந்து வீழ்ச்சி** |
| கொ.மு.சு. துணைச்சுட்டெண்கள் | | | | |
| புதிய கட்டளைகள் | 61.5 | 42.6 | - | அதிகரிப்பிலிருந்து வீழ்ச்சி |
| உற்பத்தி | 54.0 | 37.8 | - | அதிகரிப்பிலிருந்து வீழ்ச்சி |
| தொழில்நிலை | 52.0 | 44.1 | - | அதிகரிப்பிலிருந்து வீழ்ச்சி |
| கொள்வனவுகளின் இருப்பு | 51.0 | 43.1 | - | அதிகரிப்பிலிருந்து வீழ்ச்சி |
| நிரம்பலர்களின் விநியோக நேரம் | 69.0 | 64.9 | - | நீட்சியடைகின்றது மெதுவான வீதத்தில் |

மூலம்: இலங்கை மத்திய வங்கி

புதிய கட்டளைகள் மற்றும் உற்பத்தியில் வீழ்ச்சிக்கிசைவாக கொள்வனவுகளின் இருப்பும் குறைவடைந்தது. மேலும், கொள்வனவுக் கட்டளைகளை முன்வைப்பதிலும் வெளிநாட்டுக் கொடுப்பனவுகளை தீர்ப்பனவு செய்வதில் எதிர்கொண்ட இடர்பாடுகளும் மூலப்பொருள் வழங்கல் சங்கிலி அத்துடன் உற்பத்தித் திட்டமிடல்கள் என்பவற்றை வெகுவாகப் பாதித்தன. இறக்குமதி செய்யப்பட்ட மூலப்பொருட்களின் செலவில் தொடர்ச்சியாக ஏற்பட்ட அதிகரிப்பு தமது இலாப எல்லைகளை மோசமாகப் பாதித்தன என பல பதிலிறுப்பாளர்கள் வலியுறுத்தினர். அதேவேளை, நிரம்பலர் விநியோக நேரம் 2021 ஓகத்தில் மெதுவான வீதத்தில் நீட்சியடைந்தது.

கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்று பற்றிய நிச்சயமின்மை, தயாரிப்புத் துறையின் எதிர்பார்க்கைகளைத் தொடர்ச்சியாக தடைப்படுத்துமென தயாரிப்பாளர்கள் எச்சரிக்கைவிடுத்தனர், இருந்தபோதிலும், அடுத்துவருகின்ற மூன்று மாதங்களுக்கான தயாரிப்பு நடவடிக்கைகளுக்கான ஒட்டுமொத்த எதிர்பார்க்கைகள் நடுநிலையான அடிப்படை அளவு மட்டத்திற்கு மேல் காணப்பட்டன.

***உலக தோற்றப்பாடு: தயாரிப்பு கொ.மு.சு***

உலகளாவிய தயாரிப்பு கொ.மு.சு 2021 யூலையிலிருந்து 1.3 சுட்டெண் புள்ளிகளைக் கொண்ட வீழ்ச்சியொன்றுடன் 2021 ஓகத்தில் 54.1 இனைக் கொண்ட பெறுமதியினைப் பதிவுசெய்தது.

இந்தியா, ஐக்கிய அமெரிக்கா, ஐரோப்பா மற்றும் ஐக்கிய இராச்சியம் ஆகிய நாடுகளின் தயாரிப்பு கொ.மு.சுட்டெண்கள் மெதுவான வீதத்தில் வீழ்ச்சியடைந்தன. அதேவேளை, 2021 ஓகத்தில் சீனாவின் தயாரிப்பு கொ.மு.சுட்டெண் சுருக்கமடைந்த அதேவேளை, ரஷ்யாவின் கொ.மு.சுட்டெண் மேலும் சீர்குலைவொன்றினைச் சுட்டிக்காட்டின.

*மூலம்: மார்க்கிட்[1], 2021 செத்தெம்பர் 14இல் உள்ளவாறு*

*1 மார்க்கிட் நிறுவனமானது நிதியியல் தரவுப் பணிகள் தொடர்பான முன்னிலையான உலக பன்முகத்தன்மை வாய்ந்த வழங்குநராகும். இது உலக கொ.மு.சு தொகுப்பாளராக அடையாளங்காணப்படுவதுடன் யூரோ வலயம் போன்ற முக்கிய பிரதேசங்கள் உள்ளடங்கலாக 30க்கும் மேற்பட்ட நாடுகளுக்கு கொ.மு.சு இனை தொகுக்கின்றது.*

**கொவிட்-19 மேலும் பரவுவதனைக் கட்டுப்படுத்துவதற்கு விதிக்கப்பட்ட கட்டுப்பாடுகள் மூலம் பணிகள் கொ.மு.சுட்டெண் 2021 ஓகத்தில் 46.2 இனைக் கொண்ட சுட்டெண் பெறுமதிக்கு வீழ்ச்சியடைந்து.** புதிய வியாபாரங்கள், தொழில் நடவடிக்கை, தொழில் நிலை, நடவடிக்கைக்கான எதிர்பார்க்கைகள் துணைச் சுட்டெண்கள் வீழ்ச்சிகளைப் பதிவுசெய்தன.

பிரதானமாக மொத்த மற்றும் சில்லறை வர்த்தகம், காப்புறுதி, உண்மைச் சொத்து மற்றும் கல்வி துணைத் துறைகளில் அவதானிக்கப்பட்ட வீழ்ச்சிகளுடன் முன்னைய மாதத்துடன் ஒப்பிடுகையில் புதிய வியாபாரங்கள் ஓகத்தில் குறைவடைந்தன.

மொத்த மற்றும் சில்லறை வர்த்தகம், உண்மைச் சொத்து, காப்புறுதி மற்றும் ஏனைய தனிப்பட்ட நடவடிக்கைகள் போன்ற அநேகமான துணைத் துறைகள் முழுவதும் தொழில் நடவடிக்கைகள் கணிசமான வீழ்ச்சிகளை அறிக்கையிட்டு அவற்றின் வியாபாரத் தொழிற்பாடுகள் மீது பயணத் தடைகளின் பாதகமான தாக்கங்களை எடுத்துக்காட்டின. எவ்வாறிருப்பினும், பிரத்தியேகமாக சரக்கு அளவுகளின் வளர்ச்சியின் காரணமாக போக்குவரத்துத் துணைத் துறை சில மேம்பாடுகளைப் பதிவுசெய்தது. மேலும், பயணத் தடைகளிலிருந்து ஏற்பட்ட இடையூறுகளுக்கு மத்தியில் நிதியியல் பணிகள் துணைத் துறையும் மேம்பாடுகளை எடுத்துக்காட்டியது.

மாதகாலப்பகுதியில் ஓய்வுபெறுதல்களும் சுயாதீனமாகப் பதவி விலகுதலும் மேற்கொள்ளப்பட்ட ஆட்சேர்ப்புக்களின் எண்ணிக்கையினை விஞ்சியமையினால் தொழில்நிலை தொடர்ந்தும் உயர்வான வேகத்தில் வீழ்ச்சியடைந்தது.

பயணக் கட்டுப்பாடுகள் மற்றும் ஊழியர்களின் அதிகரிக்கின்ற கொவிட்-19 நோய்த்தொற்றுகள் என்பவற்றுக்கு மத்தியில் ஊழியர்கள் கிடைக்கப்பெறும் தன்மை குறைவடைந்தமை மூலம் ஓகத்து முழுவதும் நிலுவையிலுள்ள பணிகள் உயர்வான வேகத்தில் அதிகரித்தன.

| மாறி | யூலை | ஓகத் | +/- | சுருக்கம் |
|---|---|---|---|---|
| **கொ.மு.சு** | **55.7** | **46.2** | **-** | **அதிகரிப்பிலிருந்து வீழ்ச்சி** |
| | | | | **கொ.மு.சு துணைச்சுட்டெண்கள்** |
| புதிய வியாபாரங்கள் | 58.6 | 40.2 | - | அதிகரிப்பிலிருந்து வீழ்ச்சி |
| தொழில் நடவடிக்கை | 63.5 | 35.3 | - | அதிகரிப்பிலிருந்து வீழ்ச்சி |
| தொழில்நிலை | 49.0 | 47.5 | - | வீழ்ச்சியடைகின்றது, உயர்வான வீதத்தில் |
| நிலுவையிலுள்ள பணி | 53.2 | 60.8 | + | அதிகரிக்கின்றது, உயர்வான வீதத்தில் |
| நடவடிக்கைகளுக்கான எதிர்பார்க்கைகள் | 54.5 | 47.1 | - | அதிகரிப்பிலிருந்து வீழ்ச்சி |

மூலம்: இலங்கை மத்திய வங்கி

அடுத்த மூன்று மாதங்களுக்கான வியாபார நடவடிக்கைகளுக்கான எதிர்பார்க்கைகள், தொடர்ச்சியாக இரு மாதங்களாக அதிகரித்ததன் பின்னர், நீடிக்கப்பட்ட பயணக் கட்டுப்பாடுகள் அத்துடன் இறக்குமதிக் கட்டுப்பாடுகள் தொடர்பில் உயர்வடைகின்ற கரிசனைகள் அதேபோன்று வியாபாரத் தொழிற்பாடுகள் மீதான அதன் தொடர்புபட்ட பாதகமான தாக்கம் என்பவற்றுக்கு மத்தியில் ஓகத்தில் வீழ்ச்சியடைந்தன.

**பணிகள்**
**கொ.மு.சு**
**சுட்டெண் பெறுமதி**
**46.2**

2021 யூலையுடன் ஒப்பிடுகையில் 9.5 சுட்டெண் புள்ளிகளைக் கொண்ட வீழ்ச்சி




மூலம்: இலங்கை மத்திய வங்கி

***உலக தோற்றப்பாடு: பணிகள் கொ.மு.சு***

உலகளாவிய பணிகள் கொ.மு.சு, 2021 யூலையில் 56.3 இலிருந்து குறைவடைந்து 2021 ஓகத்தில் 52.9 கொண்ட ஏழு மாதக் குறைவொன்றுக்கு சடுதியாக வீழ்ச்சியடைந்தது.

ஐக்கிய அமெரிக்கா, இந்தியா, ஐக்கிய இராச்சியம் ஆகிய நாடுகளின் பணிகள் கொ.மு.சுட்டெண்கள் முன்னைய மாதத்துடன் ஒப்பிடுகையில் 2021 ஓகத்தில் அவற்றின் பணிகள் துறைகள் விரிவடைந்தமையினை எடுத்துக்காட்டிய அதேவேளை, சீனா மற்றும் யப்பான் ஆகிய நாடுகளின் கொ.மு.சுட்டெண் சீர்குலைவொன்றினை எடுத்துக்காட்டியன.

*(மூலம்: மார்க்கிட்[1], செத்தெம்பர் 14, 2021 இல் உள்ளவாறு)*

**தொழில்நுட்பக் குறிப்பு:**

**சுட்டெண்**

கொ.மு.சுட்டெண்ணானது “வியாபித்தல் சுட்டெண்ணாக” கணிக்கப்படுகிறது. இங்கு இது 0 மற்றும் 100 இற்குமிடையிலான பெறுமதியினைக் கொண்டிருக்குமிடத்து.

| | |
|---|---|
| கொ.மு.சு=50 | மாதத்திற்கு மாத அடிப்படையில் துறையானது நடுநிலையில் காணப்படுகிறது. |
| கொ.மு.சு >50 | மாதத்திற்கு மாத அடிப்படையில் துறையானது பொதுவாக விரிவடைகிறது. |
| கொ.மு.சு <50 | மாதத்திற்கு மாத அடிப்படையில் துறையானது பொதுவாக வீழ்ச்சியடைகிறது. |

**மாதிரி**

மாதிரிக் கட்டமைப்பானது ஊ.சே.நிதியத் திணைக்களத்திலிருந்து பெறப்பட்ட மேல் மாகாணத்தில் அமைந்துள்ள பாரிய கம்பனிகளின் பட்டியலை அடிப்படையாகக் கொண்டுள்ளது. தயாரிப்பு மற்றும் பணிகள் நடவடிக்கைகளுக்கான மாதிரிகள் ஒவ்வொன்றிற்குமான குறைந்தபட்சம் 100 பதிலிறுப்புக்களைக் கொண்ட இலக்குகளுடன் மொ.உ.உற்பத்திகளின் துறைவாரியான பங்குகளின் அடிப்படையில் தெரிவுசெய்யப்பட்டன.

**மாறிகளின் வரைவிலக்கணங்கள்:**

| | |
|---|---|
| தொழில்நிலை | : நிறுவனத்தில் பணியாற்றும் அலுவலர்களின் எண்ணிக்கை |
| கொள்வனவுகளின் இருப்பு | : உற்பத்திக்குப் பயன்படுத்துவதற்காக கொள்வனவு செய்யப்பட்டு களஞ்சியசாலையில் வைக்கப்பட்டுள்ள மூலப்பொருட்கள் |
| நிரம்பலர் வழங்கல் நேரம் | : கட்டளை வழங்கப்பட்டமைக்கும் நிரம்பலர்களினால் பொருட்கள் வழங்கப்பட்டமைக்குமிடையிலான நேர வேறுபாடு |
| நிலுவையிலுள்ள பணிகள் | : வியாபார நடவடிக்கையின் அதிகரித்த பாய்ச்சலின் காரணமாக பூர்த்தி செய்யப்படாத கட்டளைகள் |

மற்றைய மாறிகள் சுயமான விளக்கத்தினைக் கொண்டுள்ளன.